# தமிழ் படத்தில் ஆண் பார்வையும் கதாநாயகிகளின் பின்னணிக் குரலும்

# Male Gazes and Heroines' Dubbed Voices in Tamil Movies

முனைவர் பிரேமலதா கருப்பையா / Dr.Premalatha Karupiah[1]

## Abstract

This paper explores dubbed voices among heroines in contemporary Tamil movies. This practice has become common in the past forty years. Many heroines who are native speakers and non-native speakers are known to use a dubbed voice in their movies. Most heroes use their voices in most films to ensure the authenticity of their acting. This is important because most Tamil movies are hero-centric, and the plot revolves around the lives of the male protagonists. Heroines, on the other hand, are visual appeal for the male audience to gaze on and off the screen. Hence, more importance is given to their physical appearance rather than to the authenticity of their voice.

Date of submission: 2022-03-02
Date of acceptance: 2022-04-19
Date of Publication: 2022-07-28
Corresponding author's Name:
Dr.Premalatha Karupiah
Email: prema@usm.my

**Key Words:** gender inequality, aural practices, Tamil films, voice, male gaze.

## முன்னுரை

ஒரு நாள் நான் படம் பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னிருந்து வந்த என் தோழி படத்தை பார்க்காமலேயே, '(கதாநாயகி) சரோஜா தேவியா?' என்று கேட்டாள். 'எப்படி தெரியும்?' என்று நான் கேட்க, 'எனக்கு அவரின் குரல் தெரியும்,' என்றாள் என் தோழி. இது என் அனுபவம் மட்டுமல்ல, 1980க்கு முன்பு வந்த படங்களை விரும்பிப் பார்பவர்களுக்கு இது மிக எளிது. அந்தக் கால கதாநாயகிகள் சொந்தக் குரல் பயன்படுத்துவதால் பல நேயர்களுக்கு அவர்களின் குரல் தெரியும் (Karupiah, 2017).

இந்த நிலைமை 1980க்கு பிறகு மாறிவிட்டது. பல கதாநாயகிகள் பின்னணிக் குரல் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். சுமார் நாற்பது ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பதால், தமிழ்த் திரையுலகில் இது இயல்பானதாக ஆகிவிட்டது. இந்த மாற்றங்களைப் பற்றி மக்கள் ஊடகங்களில் பல விமர்சனங்கள் உள்ளன. இதற்கு முக்கியமான காரணம் தமிழ் பேசத் தெரியாத அல்லது சரளமாக பேசாத கதாநாயகிகள் தமிழ்ப் படங்களில் நடிப்பது என்று பலர் விமர்சித்தார்கள். மற்றுமொரு காரணம் சில படங்களில் வட்டார வழக்கில் வசனங்கள் இருப்பதால் சில கதாப்பாத்திரங்களுக்கு பின்னணிக் குரல் தான் பொருத்தமாக இருக்கும் என்று சில விமர்சனங்கள். பின்னணிக் குரல் கலைஞர்களின் திறமை அபாரம். அவர்கள் பல மொழிகளில், வட்டார வழக்கில், உணர்ச்சிகளை மிகவும் தெளிவாக, அற்புதமாக குரலில் கொண்டு வரத் திறமையுள்ளவர்கள். தமிழ்த் திரையுலகில் சில முக்கிய பெண் பின்னணிக் குரல் கலைஞர்கள்: சவிதா ரெட்டி அவர்கள், தீபா வெங்கட் அவர்கள் , சின்மாயி அவர்கள், ஸ்ரீஜா ரவி அவர்கள், ரவீனா ரவி அவர்கள் (Donal, 2019).

[1] The author is an associate professor of sociology in the School of Social Sciences, Universiti Sains Malaysia, Pulau Pinang, Malaysia. Email: prema@usm.my

கதாநாயகளின் பின்னணிக் குரல் பயன்பாட்டைப் பார்தால் ஒரு முக்கிய கேள்வி எழுகிறது. இந்த நடைமுறை கதாநாயகிகளுக்கு மட்டும் தானா? முன்னணிக் கதாநாயகர்களின் நிலைமை என்ன? எல்லாக் காலங்களிலும் தமிழ்த் திரையுலகில் பல கதாநாயகர்கள் சரளமாக தமிழ் பேசுவார்கள். தமிழை தாய்மொழியாக கொள்ளாதவர்களும் கூட தங்களின் வசனங்களை பேச சொந்தக் குரலை தான் பயன்படுத்துவார்கள். இதற்கு மோகன் அவர்கள் ஒரு விதிவிலக்கு. அவர் பல படங்களில் சுரேந்தர் அவர்களின் குரலை பயன்படுத்தினார் . இதனால் பல நேயர்கள் அது தான் மோகனின் சொந்தக் குரல் என்று நம்பிய காலமும் உண்டு. சில கதாநாயகர்கள் ஆரம்ப காலப் படங்களில் மட்டும் பின்னணிக் குரலை பயன்படுத்தினார்கள்: உதாரணதிற்கு பிரபுதேவா அவர்கள் (காதலன், 1994), அஜித் (அமராவதி, 1992) அவர்கள் ஆரம்பக்காலங்களில் மட்டும் பின்னணிக் குரலை பயன்படுத்தினார்.

பின்னணிக் குரல் பயன்படுதுவது வழக்கமாக நடப்பது என்று பல நேயர்களுக்கு தெரியும் ஆனால் இந்த வழக்கம் காதநாயகிகளிடம் தான் அதிகமாக உள்ளது. மொழி தெரியாமல் இருப்பது ஒரு காரணமாக இருந்தாலும் மொழி தெரிந்த பலர் இப்படி செய்வதால் சில முக்கிய கேள்விகள் எழும்புகிறது. ஏன் மொழி சரளமாக பேசாத கதாநாயகர்கள் பின்னணிக் குரலை தொடர்ந்து பயன்படுத்துவதில்லை? ஏன் தமிழ் பேசத் தெரிந்த கதாநாயகிகள் சொந்தக் குரலை பயன்படுத்துவதில்லை? இந்த கேள்விகளை இந்த கட்டுரை விவரிக்க முயல்கிறது.

## ஆய்வு முன்னோடி

ஆண் மற்றும் பெண்ணின் உடல் திரையில் ஒரேமாதிரி காட்டப்படுவதில்லை என்று பல ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.(நிக்ஷீமீமீஸீமீ, 2009). பெண்களின் உடல் காட்சிப் பொருளாகவும் மற்றும் கவர்ச்சிக்காகவும் காட்டப்படுகிறது. இந்த வழக்கம் இந்தியா மற்றும் ஹாலிவுட் படங்களில் காணப்படுகிறது. பல திரைப் படங்களில் பெண்களும் அவர்களின் கதாப்பாதிரமும் ஆண் பார்வைக்காக உருவாக்கப்படுகிறது (Derne & Jadwin, 2000; Mulvey, 1975; Tere, 2012).

ஆண் பார்வையை விளக்கும் பொழுது Mulvey *(1975)* இப்படி விவரிக்கிறார். படங்களில் ஆண் கதாப்பாத்திரங்கள் (முக்கியமாக கதாநாயகன்) செயல் திறன் நிறைந்தவர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். பெண் முன்னணி கதாப்பாத்திரங்களுக்கு செயல் திறன் குறைவாகவே சித்தரிக்கப்படுகிறது. பெண்களின் கதாப்பாத்திரம் திரைப் படத்திலுள்ள கதாநாயகனின் பார்வைக்கும் திரைப் படத்தை பார்க்கும் ஆண் ரசிகர்களின் பார்வைக்காகவும் உருவாக்கப் படுகிறது. காட்சியில் உள்ள பாலின சமத்துவமின்மையை பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகிறது (Derne & Jadwin, 2000; Mulvey, 1975; Tere, 2012) ஆனால் இதில் ஒலியின் பங்கு என்னவென்று மிகச் சில ஆய்வுகளே விவரிக்கிறது. அதுவும் தமிழ் அல்லது இந்தியா படங்களைப் பற்றி ஆய்வுகள் மிகக் குறைவு. திரைப் படம் காட்சி மற்றும் ஒலியைக் (குரல், பாடல், பின்னணி இசை)கொண்டது. ஒரு திரைப் படத்தின் பொருள், கதை, உட்கருத்து, அல்லது சித்தாந்தத்தை ரசிகர்களிடம் கொண்டு சேர்க்க, காட்சியும், ஒலியும் முக்கியம் (Silverman, 1988). ஆகையால் திரையிலுள்ள பாலின சமத்துவமின்மையை ஆராயும் பொழுது அதில் ஒலியின் பங்கையும் ஆராயவேண்டும். இக்கட்டுரையின் நோக்கமும் அதுவே .

## ஆய்வு நெறி

இவ்வாய்வுக் கட்டுரை இலக்கிய மீளாய்வு அடிபடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கட்டுரை திரைப் படத்தில் ஒலியை ஆராய்ந்து ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பு மற்றும் விமர்சனத்தை கொண்டுள்ளது. இதனுடன் தத்துவார்த்த மற்றும் கோட்பாடுகளின் விவாதமும் உள்ளது (Greene, 2009; Karupiah, 2015, 2017; Mulvey, 1975; Silverman, 1988). இறுதியாக சில குரல் சமந்தப் பட்ட முக்கிய உலக நிகழ்வுகளின் விமர்சனமும் உள்ளது.

## தமிழ் திரைப் படங்களும் பெண்களின் பங்கும்

தமிழ் திரைப் படங்களில் பெண்களின் குரலை ஆராயும் முன், தமிழ்த் திரையுலக்கின் சூழலை கொஞ்சம் பார்க்கவேண்டும். தமிழ்த் திரையுலகம் இன்னமும் ஆண்களின் ஆதிக்கத்தில் தான் உள்ளது. திரைக்கதையில் மட்டுமல்ல, பல தொழில் நுட்ப கலைகளிலும் இந்த ஆதிக்கத்தைப் பார்க்கலாம். செல்வராஜ் வேலாயுதம் மற்றும் விஜய் தேவதாசின் ஆய்வில், 2000த்திற்கு பிறகு தமிழ்த் திரையுலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறுகிறார்கள். பல துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து உள்ளது.

இந்த மாற்றங்கள் நடந்து கொண்டிருந்தாலும் இன்னும் தமிழ்த் திரையுலகில் பெண் படைப்பாளர்களின் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. திரைக்கதையை ஆராய்ந்து பார்த்தால் பல படங்கள் இன்னமும் ஆணின் அனுபவங்களை தான் முன்னிருந்துகின்றன. ஆகையால், பல படங்களில் பெண்களின் அனுபவமும், குரலும் கேட்பதில்லை. இந்த நிலைமையில் பெரும்பாலான பெண் கதாப்பாத்திரங்கள் கதையை வழிநடத்தி செல்லும் கதாநாயாகனின் இலக்கை அடைய ஆதரவு கொடுப்பதர்காக உருவாக்கப் படுகின்றன.

இந்த கதாப்பாத்திரங்கள் பெண்ணின் வாழ்க்கையின் நுணுக்கங்களை வெளிப்படுதுவதில்லை. பெண் கதாப்பாத்திரங்கள் ஒரு ஆணின் அனுபவங்ளுக்கு ஆதரவாக மற்றும் துணையாகவே பெரும்பலும் படங்களில் சித்தரிக்கபடுகின்றன . இதனால், தமிழ் மற்றும் இந்தியத் திரைப் படங்களில் பெண் கதாப்பாத்திரங்கள், ஒரு காட்சிப் பொருளாகவும், கவர்ச்சிக்காகவும் உருவாக்கப்படுகின்றன . ஆகையால், ஒரு பெண் நடிகரின் தோற்றம் முக்கியமாகிறது. இது முக்கியமாக கதாநாயகிகளுக்கு பொருந்தும். இவர்களின் கதாப்பாத்திரம் காட்சிப் பொருளாக ஆண் பார்வைக்காக உருவாக்கப் படுகிறது. பல படங்களில் கதாநாயகியை மிகவும் குழந்தைத் தனமாக பார்க்கலாம் (சாலையைக் கடக்க தெரியாது, தலையை முட்டி விளையாடுவது). பல நேரங்களில் அவர்கள் துன்பத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டியவர்களாகத் தான் காட்டப் படுகிறார்கள் (damsel in distress).

## ஆண் பார்வையில் பெண்கள் அழகு இலக்கணம் (female beauty standard)

ஆண் பார்வைக்காக உருவாக்கப் பட்ட பெண் கதாப்பாத்திரங்களில், ஒரு பெண்ணின் தோற்றமும்ம கவர்ச்சியும் முக்கியமாக கருதப்படுகிறது. திரைப்படங்களில் கவர்ச்சி பல விதத்தில் சித்தரிக்கப்படுகிறது . இதற்காக கதாநாயகிகளின் தேர்வில் உடல் அமைப்பு, நிறம், மற்றும் வயதிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் அவர்களின் சொந்தக் குரலை பயன்படுதுவதும் திறமையும், தமிழ் பேசும் திறமையும் பின் தள்ளப்படுகிறது. பெரும்பாலும் ஒல்லியான, இளமையான, சிவப்பான நடிகைகள் தான் கதாநாயகிகளாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இதுதான் தமிழ்த் திரையுலகின் இன்றைய பெண் அழகின் இலக்கணம் (Karupiah, 2015).

உடல் ஒல்லியாக இல்லாத, அல்லது பருமனான நடிகைகள் கதாநாயகிளாக வருவது அபூர்வம். இதைப் போலவே சிவப்பான நடிகைகள் தான் கதாநாயகிகளாகக் காணலாம். சில படங்களில் மாநிறமான நடிகைகள் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள் ஆனால் கருப்பான நடிகைகளை கதாநாயகிகளாகப் பார்பதும் இன்றைய படங்களில் மிகவும் அரிது. கருப்பான கதாபாத்திரமாக இருந்தாலும் பல படங்களில் சிவப்பான நடிகையை தான் ஒப்பனையின் மூலம் கருப்பாகக் காட்டுகிறார்கள். மேலும் பருமனான அல்லது கருப்பான கதாப்பாதிரங்கள் நகைசுவைக்காக ஏளனம் செய்வது வழக்கமாக தமிழ்ப் படங்களில் காணலாம். இவர்களை தீயவர்களாக மற்றும் குறைபாடு உள்ளவர்களாகவும் காட்டுவது வழக்கம். இந்த விதமான ஏளனம் இரு பாலருக்கும் நடக்குமானாலும், பெரும்பாளான காட்சியில் பெண்களே

ஏலனாதிற்கு ஆளாகிறார்கள் (உதாரணமாக கருப்பான கல்யாணப் பெண்ணை கல்யாணதிற்கு தகுதியற்றவள் என்று கேலி செய்வது, பருமனான பெண்களை பெருந்தீனி தின்பவர்களாக காட்டுவது).

இளமையான பெண்களை மட்டும் கதாநாயகிகளாக வருவதைப் பற்றி விவரிக்க தேவையில்லை. பெரும்பாலான நடிகைகள் பத்து வருடங்களுக்கு குறைவாகவே கதாநாயகியாக நடிக்கிறார்கள். இதற்கு விதிவிலக்காக சிலர் இருந்தாலும் பல நடிகைகள் சிறிது காலம் கதாநாயகியாக நடித்து விட்டு பிறகு கதாநாயகனின் அம்மாவாக அல்லது அண்ணியாக நடிப்பது வழக்கம். குறுகிய காலத்தில் மட்டும் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு இருப்பதால் அவர்களின் திறமையை வெளிப்படுத்த இந்த குறுகிய காலத்தில் பல படங்களில் நடிப்பார்கள். அதனால் கூட அவர்களால் சொந்தக் குரலை பயன்படுத்த சிரமமாக இருக்கலாம்.

கதாநாயகனாக நடிப்பவர்களின் கதை வித்தியாசமானது . பலர் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குக் கூட கதாநாயாகனாக நடிக்கிறார்கள் (Karupiah, 2015, 2016). இதே வழக்கம் ஹாலிவுட் திரைப் படங்களிலும் இருந்தது ஆனால் இப்பொழுது இதில் பல மாற்றங்களை காணலாம். பல விதமான கதைகள் உருவாக்கபடுகிறதால் பல வகையான பெண்கள் கதநாயகியாக வருகிறார்கள்: இளையவர், முதியவர், வெவ்வேறு உடல் நிறம், தோற்றம். இது ஒரு சிறந்த மாற்றம் என்றாலும், மேற்கத்திய படங்கள் இன்னும் 'வெள்ளையாக' இருக்கிறது என்று பல எதிர்புகள் மக்கள் ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் பேசப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு விமர்சனத்தைதான் #OscarsSoWhite வலியுறுத்தியது (Borum Chattoo, 2018). திரைப் படங்களில் பன்முகத்தன்மை (diversity) மிகவும் அவசியம். அது பல்வேறு கலைஞர்கள், கதைகள், தொழில்நுட்பங்கள் ஒன்றுகூடும் இடமாக விளங்க வேண்டும். இப்படி மட்டும் தான் வாழ்க்கையில் வரும் பல அனுபவ நுணுக்கங்களை சித்தரிக்க முடியும்.

பன்முகத்தன்மையை ஆதரிக்கும் ஒரு சூழல் இல்லையென்றால் கதாநாயகியின் கதாப்பாத்திரங்களுக்கு அவர்களின் தோற்றம் மட்டும் முக்கியமாகிறது, முன்னிலைப் படுத்தப்படுகிறது. அவர்களின் குணமும் தோற்றமும் ஆண் பார்வைக்கு ஏற்ப உருவாக்கப்படுகின்றன . இரண்டும் கவர்ச்சிக்காக பயன்படுதப்படுகிறது. திரையிலிருந்தும் வெளியிலிருந்தும் வரும் ஆண் பார்வைக்கு பெண் காட்சிப்பொருளாக்கப்படுகிறாள். ஆகையால் பெண் கதாப்பாத்திரங்கள் பார்பதற்காக உருவாக்கப்படுகின்றன என்பது Mulvey இன் வாதம்.

இந்த முறையில் அமைக்கப்பட்ட கதாப்பாத்திரங்கள், தமிழ், ஹாலிவூட், பாலிவுட் படங்களில் பார்க்கலாம் என்று ஆய்வுகள் கூறுகின்றன (Derne & Jadwin, 2000; Karupiah, 2015, 2016; Mulvey, 1975; Tere, 2012). இந்த ஆய்வுகளில் உடைகள், நடவடிக்கைகள், நடன அசைவுகள் மற்றும் வசனங்களை பயன்படுத்தி பெண் காட்சிப்பொருளாக்கப்படுகிறாள் என்று தெரியவருகிறது. இதைத்தவிர நீணீனீமீக்ஷீணீவின் இயக்கத்தின், அசைவின் மற்றும் குவிநிலையின் மூலம் ஆண் பார்வை முன்னிலைப் படுத்தப்படுகிறது. இதன் மூலம் படம் பார்க்கும் நேயர்கள் இதே கோணத்திலிருந்து பெண் கதாப்பாத்திரங்களை (முக்கியமாக கதாநாயகிகளை) பார்க்கிறார்கள்.

இந்தப் பார்வை பெரும்பாலான படங்களில் பயன்படுத்தபடுவதால் இது இயல்பாகிறது, ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதனால், பெண் நேயர்கள் கூட இந்த பார்வையையே ஏற்றுக்கொள்கிறார்கள். சில சமயங்களில் பெண்களை அல்லது பெண்களின் பிரச்சினையை மையமாக கொண்டப் படங்களில் கூட ஆண் பார்வையை பார்க்கலாம். உதாரணத்திற்கு பாலியல் வன்முறையை பற்றிய படங்களில் கூட ஆண் பார்வையின் ஆதிக்கத்தை பார்க்கலாம் (Karupiah, Pathmanathan, & Nikku, 2020).

## ஒரே மாதிரியான பெண் குரல்கள் (Stereotyping Female Voice)

ஆண் பார்வையின் ஆதிகத்தில் இருக்கும் தமிழ்த் திரையுலகில் பெண்களின் குரல் எப்படி இருக்கிறது என்ற கேள்வி எழும்புகிறது. பெண்களின் குரல் கவர்ச்சிக்கு முக்கியமானதில்லையா என்றும் கேட்கலாம். பெரும்பாலான கதாநாயகர்கள் சொந்தக் குரலில் பேசுவதால் பல விதமான குரலை அவர்களிடமிருந்து கேட்கலாம்: கீச்சுக் குரல், கம்மலானக் குரல், high மற்றும் low pitched குரல். பலவிதமாக ஆண் நடிகர்களின் குரல் இருப்பதால் தான், அவர்களின் குரல் அவரின் தணித்துவதைக் காட்ட உதவுகிறது. ஆண் நடிகர்கள் தோற்றதில், உருவத்தில், நிறத்தில் மட்டும் வேறுபற்று தெரிவதில்லை, அவர்களின் குரலும் இதற்கு பெரிய பங்காற்றுகிறது.

இதனால்தான் பல mimicry கலைஞர்கள் ஆண் நடிகர்களின் குரல் மற்றும் பாவங்களை mimicry செய்கிறார்கள். பெண் குரலை mimicry செய்வது மிகவும் அரிது. இது கடினமும் கூட, ஒரே பின்னணிக் குரல் கலைஞர் பல கதாநாயகிகளுக்கு பின்னணிக் குரல் கொடுக்கிறார். அதே மாதிரி ஒரே கதாநாயகி பல பின்னணிக் குரல் கலைஞர்களின் குரலைப் பயன்படுதலாம். ஆகையால் இவர்களின் தனித்தன்மை பாவத்திலும், தோற்றத்திலும் மட்டும் தான் தெரியும், குரலில் தெரியாது, ஆகையால் mimicry கலைஞர்களுக்கு இதில் ஆர்வம் குறைவு. இதைத் தவிர தமிழ் பெண் mimicry கலைஞர்களும் மிகவும் குறைவு.

நாம் கூர்மையாக கவனித்தால் சில முக்கிய பின்னணிக் குரல் கலைஞர்கள் பல கதாநாயகிகளுக்கு தமிழ்ப் படங்களில் குரல் கொடுகிறார்கள். அதனால் கதாநாயகிகளின் குரல்களில் நிறைய வேறுபாடுகள் இருப்பதில்லை. பெரும்பாலான கதாநாயகிகளுக்கு மென்மையான, சற்று highpitch ஆனா, கொஞ்சம் குழந்தைத் தனமான குரல்கள் தான் பயன்படுத்தப் படுகிறது. அதனால் தமிழ்ப் படங்களில் கவர்ச்சியான, அழகான, கனவுக்கன்னி என்று கருதப்படும் (மற்றும் ‘நல்ல’) பெண்களின் குரல் ஒரே விதமாகவே அளிக்கப்படுகிறது. நாம் அன்றாட வாழ்க்கையில் பெண்களின் குரல் பல விதமாக இருக்கும், ஆனால் இந்த வேறுபாடுகள் படங்களில் வருவதில்லை. எப்படி அழகின் இலக்கணம் மிகக் குறிகியநிலையில் படங்களில் வருகிறதோ, அதே போல தான் ஒரு அழகிய பெண்ணின் குரலும் சித்தரிக்கப்படுகிறது. மிகச் சில விதமான குரல்கள் கதாநாயகிகளிடமிருந்து கேட்கிறோம். அதே நடிகைகள் துணை கதாப்பாத்திரங்களில் நடித்தால் வேறு விதமான குரல்கள் பயன்படுதப்படுகின்றன. உதாரணத்திற்கு, நக்மா அவர்கள் கதாநாயகியாக நடிக்கும் பொழுது அவருக்கு கொடுக்கப்பட்ட குரல் மென்மையானது ஆனால் அவருக்கு Citizen *(2001)* திரைப்படத்தில் கொடுக்கப்பட்ட குரல் மிகவும் வித்தியாசமானது. அந்த படத்தில் அவர் காவல் துறை அதிகாரியாக நடித்திருந்தார், அவரின் ஆற்றலையும் அதிகரத்தையும் காட்டுவதற்கு, சிறிது ஆணின் சாயல் உள்ள குரலை பயன்படுத்தினார்கள். கதநாயகியாக நடிக்கும் பொழுது, மென்மையான குரல் மட்டும் பயன்படுத்தப்பட்டது. ஒரு விதத்தில் இது அழகிய பெண்களின் குரல் மிகச் சில வகையில் தான் இருக்கும் என்ற ஒரு பிம்பத்தை உருவாக்குகிறது. தமிழ்ப் படங்களில் இந்த வேறுபாடுகள் ஆண் குரலில் வருவதில்லை, ஒருவர் கதாநாயகனாக, முக்கிய காதபாத்திரங்களில் (சில சமயங்களில் பெண்ணாக) நடிக்கும் பொழுதும் ஒரே குரலை தான் பயன்படுத்துவார்கள். பெரும்பாலான படங்களிள் ஆணின் அனுபவங்களை முன்னிலை படுத்தி வருவதால் அவர்களின் தனித்துவத்திற்கு குரல் முக்கியமானது அதனால் பேணப்படுகிறது.

இதில் இன்னும் ஒரு விஷயமும் கவனிக்கப்படவேண்டும். தமிழ் பெண் செய்தியாளர்கள் குரல்களை கவனித்தால் கதாநாயகிகளின் குரலைப் போல மென்மையாக இருக்காது. செய்தி வாசிக்கும் போது முக்கியமான விவரங்களை வாசிபாதால், செய்தி வாசிப்பாளர்களுக்கு சற்று உரத்தக் குரல் இருக்கும். இது அவர்களின் ஆற்றல் மற்றும் அதிகாரத்தை காட்டும். ஆனால் தமிழ்ப் படங்களில் கதாநாயகிகள்

இளமையாகவும் விளையாட்டுத்தனமாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள், ஆதலால் அவர்களுக்கு மென்மையான குழந்தைத் தனமான குரல் தான் கொடுக்கப்படுகிறது. இந்த விதமான குரல் 'லூசு பெண்ணாக' காட்டப்படும் கதநாயகிகளுக்கும் ஏற்றவாறு இருக்கிறது. சுமார் முப்பது ஆண்டுகளாக கதாநாயகிகளை 'லூசு பெண்ணாக' சித்தரிக்கப்படுகிறார்கள் என்பது பல மக்கள் ஊடகங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது ("The 'loosu ponnu' in Tamil cinema and why she should retire ", 2018).

*2013*இல் நான் மலேசியா வாழ் தமிழ் இளைஞர்களிடையே தமிழ்ப் படங்களில் உள்ள பெண் அழகின் இலக்கணத்தைப் (beauty standard) பற்றி ஒரு ஆய்வு செய்தேன். அவர்கள் சிவப்பான, ஒல்லியான, மற்றும் இளமையான கதநாயகிகளை பற்றி விமர்சிதார்கள். இது தான் தமிழ்ப் படங்களில் உள்ள அழகின் இலக்கணம் என்றார்கள். இதைத் தவிர பெண்ணின் குரலை பற்றி அவர்கள் ஒரு சுவாரசியமான தகவலையும் கூறினார்கள். அவர்கள் ஒரு சில விதமான குரல்களை ரசிக்கிறார்கள், முக்கியமாக மெல்லிய, மென்மையான மற்றும் குழந்தைத் தனமான குரல்களை ரசிக்கிறார்கள். அதே சமயதில், சில குரல்களை கதநாயகிகளுக்கு பொருத்தமற்ற குரல் என்று கூறினார்கள். இதற்கு அவர்கள் ஒரு உதாரணம் கூறினார்கள். ஷ்ருதி ஹாசன் அவர்கள் போன்ற நடிகை அழகாகவும் திறமையாகவும் இருக்கிறார். அவர் குரல் பாடும் போது இனிமையாக இருக்கிறது என்றார்கள், ஆனால் ஒரு 'ஹீரோயினின்' குரல் போல இல்லை. சற்று கரடுமுரடாக இருக்கிறது என்றார்கள். ஹீரோயினின் குரல் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் 'soft'அ இருக்கவேண்டும் என்றார்கள். இவரின் குரல் அப்படி இல்லையா என்று கேட்டதற்கு, 'அவர் குரல் கொஞ்சம் 'rough'ஆக இருக்கிறது' ,என்றார்கள். இது ஒரு சிலரின் கருத்தாக இருந்தாலும், கதநாயகிகளுக்கு 'சில குறிக்கிய விதமான' குரல் உண்டு என்ற எண்ணதைக் காட்டுகிறது. இந்த நிலமை பழைய படங்களில் இல்லை என்றார்கள். *19601970* இல் எல்லா கதநாயகிகளும் சொந்தக் குரலில் பேசும் பொழுது இந்த நிலைமை இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஒவ்வொரு கதாநாயாகியும் ஒவ்வொரு விதமான குரலில் பேசுவார்கள். அன்றாட வாழ்கையில் இருப்பது போல், திரையிலும் பெண்களின் குரல் பல விதமாக ஒலித்தது என்றார்கள்.

*1980*க்கு பிறகு பின்னணிக்குரலின் பயன்பாடு அதிகரித்ததால், பெண்களின் குரல் குறிப்பாக கதநாயகிகளின் குரல் ஒரே மாதிரியாக்கப் பட்டிருக்கிறது (being stereotyped) என்பது என் வாதம். இது சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வழக்கமாக இருப்பதால் நேயர்களுக்கு இது இயல்பாக (has been normalized) தோன்றுகிறது. இதில் என்ன பிரச்சனை என்று கேட்கத் தோன்றும். பெண்ணின் அழகின் இலக்கணம் ஒரே மாதிரியாக இருப்பதால் (stereotyped beauty standard) அல்லது ஒரு குறுகிய வட்டதிற்குள் சொல்லப்படுவதால் பல இளம் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த குறுகிய அழகின் இலகணத்திற்கு பொருந்தாதப் பெண்கள் அழகில்லாதவர்கள் என கருதப்படுகிறார்கள், அல்லது சொந்தமாக அவர்கள் இதை நினைத்து வருந்தலாம். அதே போலத் தான் குரல் ஒரே விதமாக்கப்பட்டால், இதனால் சில பெண்கள் பாதிக்கப்படுவார்கள். இது நடைமுறையில் இல்லாததும் அல்ல, யுனைடெட் கிங்டமின் (United Kingdom) முன்னாள் பிரதமர், Margaret Thatcher அவர்கள், ஒரு குரல் பயிற்சியாளரின் துணையுடன், அவரின் குரலின் pitch-ä குறைத்தார். இந்த விதத்தில் அவரின் குரலில் அதிகாரம் தெரியும் என்று எதிர்பார்க்கப்பட்டது (Robson, *2018*).

*2008* பெய்ஜிங் ஒலிம்பிக்கின் திறப்பு விழாவில் ஒரு பெண் குழந்தை (Lin Miaoke) உலகையே மெய் மறைக்கச் செய்யும் முறையில் பாடினார். பிறகு தான் தெரியவந்தது அந்த பாடலை பாடியாவர் வேறு ஒரு குழந்தை (Yang Peiyi), அந்த குரலுக்குத் Lin Miaoke வாயசைத்து பாவனை செய்தாரென்று (Yardley, *2008*). நிகழ்ச்சிகளில் பெண்கள் மேடையில் (front stage) இருக்கும் பொழுது, அவர்களின் தோற்றதிற்குத் தான்

முக்கியதுவம் அளிக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இது பொதுமையான நிலை என்று கூறமுடியாது என்றாலும், இது நடக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. வெளிபடையாகக் கூறப்படவில்லை என்றாலும், பெண்ணின் குரலின் தன்மையும், அவரின் அழகும் அல்லது அதிகாரமும் சம்பந்தப்படுத்தப் படுகிறது. இதே வழக்கம் திரைப்படங்களில் தொடர்ந்து வருவதால் இது இன்னும் வலிமையாகிறது. குறுகிய உடல் அழகின் இலக்கணம் போல இதுவும் பெண்களின் நலனை (wellbeing) பாதிக்கும். இது சமூகதில் பெண்ணை சமமாக பார்ப்பதற்கு தடையாகக் திகழும்.

### முடிவுரை

ஒரு விதத்தில் பார்த்தல் 2000த்திற்கு பிறகு, தமிழ்ப் படங்களில் பல விதமான புதிய கதைகள், கோணங்களை பார்க்கலாம். பல புது தொழில்நுட்பக் கலைஞர்கள், இயக்குநர்கள், நடிகர்களை பார்க்கலாம். பல விதமான சமூக நிலையில் இருக்கும் அனுபவங்களையும், பிரச்சனைகளையும் திரையில் பார்க்கலாம் (உதாரணத்திற்கு பரியேறும் பெருமாள் (2018), மேற்குத் தொடர்ச்சி மலை (2018)). ஆனால் இந்த மாற்றங்கள் இருந்தாலும் இன்னும் பெண்களின் அல்லது சிறுபான்மையினரின் அனுபவங்கள் குறைவாகத்தான் இருக்கிறது (உதாரணத்திற்கு மாற்றுத் திரனாளிகள், திருநங்கையின் அனுபவங்களை முன்நிலைப் படுத்துவது. இவர்களை பற்றி கதை இருந்தாலும் அவர்கள் நடிகர்களாக தேர்வு செய்வது குறைவு). இந்த வேறுபாடுகள் திரைக்கு வருவதற்கு பல விதமான சமூக பிரிவிலிருந்து தொழில் நுட்பக் கலைஞர்கள் வேண்டும். பெரும்பாலக ஆண் பார்வையிலேயே இயல்பாக இருக்கும் திரையுலகிற்கு, பெண் பார்வையை (female gaze)கொண்டு வருவதற்கு பெண் இயக்குனர்கள் மற்றும் camerawomanகள் (வேறு தொழில்நுட்ப கலைஞர்கள்) மிகவும் அவசியம்.

பெண் பார்வை என்பது பெண்களின் கோணத்திலிருந்து ஒரு விஷயதைப் பார்த்து அதைக் காட்சியாக பிறர் பார்பதற்காக உருவாக்குவது (Moletsane et al., *2009*). இந்த விதமான மாற்றங்கள் தமிழ்த் திரையுலகில் வருவதிற்கு, ஆண் ஆதிக்கத்தில் இருக்கும் தமிழ்த் திரையுலகில், பெண்களின் பங்கேற்பு அதிகரிக்க வேண்டும். இந்த மாற்றங்கள் பெண் குரலை அதிகரிக்கச் செய்ய உதவும். பெண் குரல் இங்கே பெண்கள் பேசும் ஓசையை மட்டும் குறிப்பதல்ல, அவர்களின் உரிமையின் குரலையும் குறிக்கிறது. இது மற்றுமின்றி அவர்களுக்கு படைப்புகளை உருவாக்கவும் மற்றும் நேயர்களுக்கு கொண்டு செல்வதற்கும் ஒரு ஊட்டமாளிக்கும் இடம் (nurturing space) தேவை.

- இக்கட்டுரையை படித்து தன் கருத்துகளை பகிர்ந்து கொண்ட பா. சிவனேஸ்வரன் அவர்களுக்கு நன்றி.

## References

Borum Chattoo, C. (2018). Oscars So White: Gender, Racial, and Ethnic Diversity and Social Issues in U.S. Documentary Films (2008–2017). *Mass Communication and Society, 21*(3), 368-394. doi:10.1080/15205436.2017.1409356

Derne, S., & Jadwin, L. (2000). Male Hindi filmgoers' gaze: An ethnographic interpretation. *Contributions to Indian Sociology, 34*(2), 243-269.

Donal, A. (2019, January 23, 2019). Popular Women Dubbing artists of South Indian cinema _ JFW Just for women. *Just for Women*. Retrieved from https://jfwonline.com/article/9-of-south-indian-cinemas-top-female-dubbing-artists/

Greene, L. (2009). Speaking, Singing, Screaming: Controlling the Female Voice in American Cinema. *The Soundtrack, 2*(2), 63-76. doi:10.1386/st.2.1.63/1

Karupiah, P. (2015). Have Beauty Ideals Evolved? Reading of Beauty Ideals in Tamil Movies by

Malaysian Indian Youths. *Sociological Inquiry, 85*(2), 239-261. doi:10.1111/soin.12070

Karupiah, P. (2016). Hegemonic femininity in Tamil movies: exploring the voices of youths in Chennai, India. *Continuum, 30*(1), 114-125. doi:10.1080/10304312.2015.1117574

Karupiah, P. (2017). Voiceless Heroines: Use of Dubbed Voices in Tamil Movies. *Asian Women, 33*(1), 73-98.

Karupiah, P., Pathmanathan, S., & Nikku, B. R. (2020). Perception of sexual violence in Tamil movies by Malaysian Indian viewers. *Feminist Media Studies*, 1-15. doi:10.1080/14680777.2020.1850501

The 'loosu ponnu' in Tamil cinema and why she should retire (2018, 30 September 2018). *The News Minute*. Retrieved from https://www.thenewsminute.com/article/loosu-ponnu-tamil-cinema-and-why-she-should-retire-89332

Moletsane, R., Mitchell, C., de Lange, N., Stuart, J., Buthelezi, T., & Taylor, M. (2009). What can a woman do with a camera? Turning the female gaze on poverty and HIV and AIDS in rural South Africa. *International Journal of Qualitative Studies in Education, 22*(3), 315-331. doi:10.1080/09518390902835454

Mulvey, L. (1975). Visual Pleasure and Narrative Cinema. *Screen, 16*(3), 6-18. doi:10.1093/screen/16.3.6

Robson, D. (2018, 13 June 2018). The reasons why women's voices are deeper today. *BBC*. Retrieved from https://www.bbc.com/worklife/article/20180612-the-reasons-why-womens-voices-are-deeper-today

Silverman, K. (1988). *The Acoustic Mirror: The Female Voice in Psychoanalysis and Cinema*. Bloomington: Indiana University Press.

Tere, N. S. (2012). Gender reflections in mainstream Hindi cinema. *Global Media Journal Indian Edition, 3*(1), 1-9.

Velayutham, S., & Devadas, V. (2020). Introduction. In S. Velayutham & V. Devadas (Eds.), *Tamil Cinema in the Twenty-first Century: Caste, Gender and Technology* (pp. 1-16). London: Routledge.

Yardley, J. (2008, 12 August 2008). In Grand Olympic Show, Some Sleight of Voice. *The New York Times*. Retrieved from https://www.nytimes.com/2008/08/13/sports/olympics/13beijing.html